# மக்கள் மறுவாழ்வு

மலர்: 5 | ஆடி-ஜூலை 1987 | விலை 75 காசுகள் | இதழ்: 10


## குடியுரிமை பெற்ற இலங்கை மலையக தமிழர்களுக்கு

# ஓட்டளிப்பதற்குத் தடை!

**இலங்கையில் குடியுரிமை பெற்ற 94 000 மலையகத்தமிழர்கள், எதிர் வரும் உள்ளூராட்சித் தேர்தல்களில் வாக்களிக்க தடை ஏற்பட்டுள்ளது இவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படாததால் தேர்தலில் வாக்கு அளிக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன**

நாடற்ற மக்களாக இருந்த இம்மக்களுக்குகடந்த ஆண்டு தான் இலங்கை அரசு குடியுரிமை வழங்கியது - இந்திய வம்சாவழியினராகிய இம்மக்களுக்கு குடியுரிமை வழங்கி விட்டால் இந்திய அரசு இலங்கைத் தமிழர் பிரச்சனையில் தலையிடாது இருக்கும் என்ற எண்ணத்துடனே திடீரென்று வழங்கப்பட்டது இது.

இலங்கை அரசைப் பொறுத்தவரை இந்த மக்களுக்கு குடியுரிமை வழங்கினாலும், அம்மக்களின் உரிமைகளை பறித்தும், அவர்கள் மீது அடக்கு முறைகளை பிரயோகித்தும் கொடுமைக்குள்ளாக்கி வருவதையே குறிக்கோளாக்கி வருகிறது.

1948ல் மலையக மக்களாகிய இந்திய வம்சாவழித் தமிழர்களின் குடியுரிமைப் பறிக்கப்பட்டு நாடற்ற மக்களாக்கப் பட்டார்கள்.

1964 ல் சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் நாடற்றவர்களாக இருந்த 9,75,000 பேரில் 3,00,000 பேருக்கு இலங்கைக் குடியுரிமையும், 5,25,000 பேருக்கு இந்திய குடியுரிமையும் வழங்க முடிவானது மிகுதியாக இருந்த 1,50,000 பேர்களில் 75,000 பேருக்கு இந்தியாவும் குடியுரிமை வழங்க 1974 சிறிமாவோ-இந்திரா ஒப்பந்தம் ஆனது.

ஒப்பந்தம் சரிவர நடாத்தப் படாததால் மேலும் நாடற்றவர்களாக இருந்த 94,000 பேருக்கே 1986ல் இலங்கை அரசு குடியுரிமை வழங்க முன் வந்தது.

குடியுரிமை வழங்கினாலும் தமிழ் மக்கள் மீது கொண்ட இனப்பகை, வெறியின் காரணமாக இம்மக்கள் அனுபவிக்க வேண்டிய அடிப்படை உரிமைகளை மறுத்தும் வருகிறது.

தோட்டங்களை சுவீகரித்து மாற்றுப்பயிர் செய்கைத் திட்டங்கள்," குடியேற்றத்திட்டங்கள் என்று தோட்டங்களை அழித்து அதை நம்பி வாழும் மலையகத்தமிழ் மக்களின் ஜீவாதார உரிமைகளுக்கும் குழிதோண்டி வருகிறது.

94,000 பேருக்கு குடியுரிமை வழங்கியும், வாக்குரிமை மறுக்கும் வகையில்- வரும் ஊராட்சி தேர்தலில் போட்டி இட முடியாதபடி செய்திருப்பது இலங்கை அரசின் திட்டமிட்ட இன ஒதுக்கல் நடவடிக்கையாகும்.

'விடாக் கண்டனுக்கு கொடாக் கண்டனாக' இலங்கை அரசின் இன ஒடுக்கல் நடவடிக்கைகள், இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருக்கும் தோட்ட தொழிலாளர்களாகிய மலையக மக்களின் எதிர்காலம் குறித்து அச்சமூட்டி வருகின்றன.

## மீண்டும் அகதிகள் வருகை

யாழ்ப்பாணத்தில் இராணுவம் தாக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான பேர்கள் அகதிகளாக இந்தியா வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஜூன்: 12, 1987 இலங்கை ராணுவத்தினரின் கெடுபிடியான போக்கினைச் சமாளிக்க முடியாது 20 போராளிகள் அகதிகளாக வருகை. இவர்களைத் தொடர்ந்து ஜூன் 13ம் தேதி ஒரே நாளில் பதினைந்து படகுகளில் 500 பேர் வந்தார்கள். இதில் 11 படகுகள் ராமேஸ்வரம் கடற்கரையிலும் 4 படகுகள் தொண்டி, திருப்புல்லாணி பகுதியில் கரை ஒதுங்கின, இவர்கள் அச்சுவேலி, சுன்னாகம், வசாவிளான் பகுதிகளைச் சார்ந்தவர்கள்.

தொடர்ந்து ஜூன் 14ம் தேதி 5 படகுகளில் 218 பே[ர்] ராமேஸ்வரம், ராமநாதபுர[ம்], தொண்டி, முள்முனை ஆகி[ய] பகுதிகளில் வந்து இறங்கின[ர்]. ஜூன் 15, 9 படகுகளில் வந்[த] அகதிகளின் மொத்த எண்ணிக்கை 300. மே மாத இறு[தி]

(12-ம் பக்கம் பார்க்க)

மக்கள் மறுவாழ்வு

மலர் : 5 ஆடி ஜூலை '87 இதழ் : 10

# மலையக மக்களின் எதிர்காலம்..!

இலங்கையில் தமிழர் பிரச்சனைத் தீர்வதற்கான வழியைக் காணோம்; அது நாளுக்கு நாள் ஏதோ ஒரு உருவத்தில் பயமுறுத்திக்கொண்டிருக்கிறது

மலையகத் தமிழர்களைப் பொறுத்தவரை அவர்களுக்கு குடியுரிமை வழங்கினாலும் மனித உரிமைகளை—ஜனநாயக ரீதியான குடியியல் உரிமைகளை அனுபவிக்க முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். இலங்கை அரசு திட்டமிட்டு இவைகளை மறுத்தும் வருகிறது.

1986 ஜனவரியில் பிரச்சனைக்குரியவர்களாக இருந்த 94,000 பேர்கள் எதிர்வரும் ஊராட்சி தேர்தல்களில் போட்டியிட முடியாதபடி வாக்காளர் பட்டியலில் அவர்களது பெயர்கள் சேர்க்கப்படவில்லை என்ற செய்திகள் வந்துள்ளன. இந்திய அரசு இலங்கை அரசு தலையிடாமல் இருக்க வேண்டும் என்றால், நாடற்றவர்களாக இருக்கும் இவர்களுக்குக் குடியுரிமை வழங்கிட வேண்டும் என்ற நோக்கில் இவர்களுக்கு குடியுரிமை வழங்கியது; எனவே வாக்களிக்கும் உரிமையை மறுப்பது ஆச்சரியமல்ல

'குடியுரிமை பெறும் இந்தியர்களின் எண்ணிக்கையை பூஜ்யமாக்குவதே எனது இலட்சியம்' என்று தெரிவித்த இலங்கையின் முதல் பிரதமர் டி எஸ். சேனநாயக்காவின் கட்சியின் - இன்று ஆட்சியில் அமர்ந்திருப்பவர்கள் மலையகத் தமிழ்மக்களின் உரிமைகளை மறுப்பதும், தமிழர்களை ஒழித்தே கட்டுவது என்ற அவர்களது கொள்கையின் ஒரு அம்சம் தான்.

வாக்குரிமையை மறுப்பதுமட்டுமல்ல; வடகிழக்கே குண்டுகள் போட்டு தமிழர்களை அழிக்கும் அதே வேளையில் மலையகத்தில் ஆங்காங்கே மலையக மக்களுக்கு எதிராக குழப்பங்களை விளைவிப்பது, துப்பாக்கிச் சூடுகள் நடத்துவது இளைஞர்கள் கைது செய்யப்படுவது வெளியுலகிற்கு தெரியாது நடக்கும் கொடுமைகள்; நூற்றுக்கணக்கான இளைஞர்களை கைது செய்யவும் - பிடிக்கவும் கூட திட்டமிடப்பட்டு வருவதாகவும் செய்திகள் அங்கிருந்து வருகின்றன.

இந்த நிலையில் மலையகத் தமிழ்மக்களாகிய தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலமும் கவலைக்குரியதாகவும், கேள்விக் குரியதாகவும் இருக்கிறது. ❖

## தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி

# டெலிகேட் தேர்தல்

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் பிரதிநிதிகள் பேரவைக்கு சார்பாளர்கள் டெலிகேட்டுகள் தெரிவு செய்யும் தேர்தல். எதிர்வரும் ஆகஸ்ட் 31ந் தேதி நடைபெறவிருக்கிறது. இதற்கான நியமனத்தாக்கல் ஜூலை 15ந் தேதி முடிவடைகிறது.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கி பர்மா, இலங்கை, வியட்நாம் ஆகிய நாடுகளிலிருந்து வந்த அகதிகளுக்காகவே இயங்கி வருகிறது இதில் தாயகம் திரும்பியோரே பங்காளர்களாக (அங்கத்தவராக) இருக்கிறார்கள் கூட்டுறவு வங்கியாகிய இதன் அங்கத்தவர்கள் மத்தியிலிருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்கள் அடங்கிய பேரவையிலிருந்து ஒரு இயக்குனர் தேர்ந்தெடுக்கப்படுவார். இவர், வங்கியின் இயக்குனர் குழுவில் (டைரக்டர் போர்ட்) இருந்து தாயகம் திரும்பியோர் நலன்களை கவனிப்பார் என்பது அனைவரும் அறிந்ததே.

இப்போது நடைபெறுவது 5 வது பிரதிநிதிகள் பேரவைக்கான சார்பாளர் தேர்தலாகும்.

இத்தேர்தலுக்கு, தமிழ்நாட்டில் சென்னை, செங்கல்பட்டு, வடாற்காடு, தென்னாற்காடு, சேலம் தர்மபுரி, பெரியார், கோவை, மதுரை ராமநாதபுரம், நெல்லை, கன்னியாகுமரி, திருச்சி, தஞ்சை புதுக்கோட்டை மாவட்டங்களில் மற்றும் ஆந்திர, கர்னாடகா, கேரளா ஆகிய மாநிலங்களில் வசிக்கும் அல்லது தொழில் செய்யும் வங்கி அங்கத்தவர்கள் வாக்களிப்பார்கள்

வட சென்னை (1) தொகுதிக்கு, 1வட சென்னை (2)க்கு 18, தென் சென்னைக்கு 64, செங்கற்பட்டுக்கு 6, வடாற்காட்டிற்கு 6. சேலத்திற்கு 5, தர்மபுரிக்கு 1, பெரியாருக்கு 2, கோவைக்கு 5, நீலகிரிக்கு 1, மதுரைக்கு 5, ராமநாதபுரத்திற்கு 11, நெல்லைக்கு 6, கன்னியாகுமரிக்கு 1, திருச்சி 17 தஞ்சைக்கு 8 புதுக்கோட்டைக்கு 3, கர்னாடக மாநிலத்திற்கு 1, கேரளாவுக்கு 1. ஆந்திராவுக்கு 1 என்று சார்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

# கோத்தகிரியில் மகளிர் தினம்

மலையக மறுவாழ்வு மன்றத்தின் மாதர் அணி நீலகிரி கோத்தகிரி 19.7.87 அன்று 'மகளிர் தினம்' கொண்டாட இருக்கிறது.

இத்திட்டத்தை யொட்டி, பாட்டு, கவிதை, கட்டுரை, பேச்சு, கைத்தொழில், ஆரோக்கிய தாய், குழந்தை, சுத்தமான இருப்பிடம் முதலானவற்றில் போட்டிகளும் நடத்தி பரிசு வழங்க இருக்கிறது.

'நீலகிரி சோலைகள்' என்ற தலைப்பில் கவிதைப் போட்டியும் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம்' என்ற பொருளில் பேச்சு போட்டியும், 'இந்திய தாய்', 'கூட்டுறவு' என்ற தலைப்புகளில் கட்டுரை போட்டியும், 'இலங்கை வாழ்க்கையை விட இந்திய வாழ்க்கை உயர்ந்தது' என்ற கருத்தில் பட்டி மன்றமும் நடத்துகிறது.

சேமிப்பு, பாடசாலை செல்லும் குழந்தைகள், பெண் கல்வி, பணிகள், அங்கத்தினர், கூட்டம் ஆகியவற்றில் திறமையான மன்றங்கள், சேவை, திறமை, வரவு ஆகியவற்றில் திறமையான சுகாதார பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசும் வழங்க ஏற்பாடு செய்துள்ளது.

# மறுவாழ்வு என்ன மரண வாழ்வா?

## தாயகம் திரும்பியோர் கண்ணீர் கதை

''இலங்கையில் தான் சிங்களவர்கள் எங்களை அடித்து கொடுமைப் படுத்துகிறார்கள் என்றால் இங்கேயும் அந்த கொடுமை எங்களை விட்ட பாடில்லை.

''இதோ பாருங்கள் வேலைக்குபோன தோட்டத்து முதலாளி எங்களை ஆள் வைத்து அடித்துக் காயப்படுத்திய தழும்பை'' தாயகம் திரும்பிய தொழிலாளியான சுப்பையா என்பவர் தான் உடுத்தியிருந்த சட்டையைக் கழற்றி தனது முதுகில் இருந்த தழும்புகளைக் காட்டினார். காட்டியதோடு மட்டுமல்ல;

''எனக்கு மட்டுமல்ல, இங்கு இருக்கும் பலர் அடிபட்ட தழும்புகளோடு இருப்பதைப் பாருங்கள்'' என்று காட்டினார்.

இவர்கள் அனைவரும் தாயகம் திரும்பியவர்கள். பதின்மூன்று குடும்பங்களைச்சேர்ந்த கணவன் மனைவி குழந்தைகள் என ஐம்பது பேர்கள் அடங்குவர்.

ஒப்பந்த அடிபடையில் இலங்கையிலிருந்து திரும்பிய இவர்கள் மறுவாழ்வு திட்டத்தின்கீழ் கர்னாடகா மாநிலத்தில் குடியமர்த்தப்பட்டு கொடுமைக்குள்ளாகி, வாழ முடியாது தமிழகம் திரும்பி விட்டதை இவர்கள் தங்கள் 'கண்ணீர் கதை'யில் தெரிவித்தார்கள்,

சிறிமாவோ சாஸ்திரி ஒப்பந்தத்தின்கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்புகிறவர்களுக்கு மறுவாழ்வு திட்டத்தின் கீழ் இந்திய அரசு உதவிகள் அளித்து வருகிறது.

இவர்களின் மறுவாழ்வுக்காகவே இருக்கும் 'தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி'யின் மூலம் வேலை வாய்ப்புகளும் அளிக்கப்பட்டு வருகின்றன.

ஒரு நபருக்கு(குடும்பத்திற்கு) ரூபா 25,000/- என்ற விகிதத்தில் கூட்டுறவுத் தனியார் நிறுவனங்களுக்கு குறைந்த வட்டியில் கூடுதலான தவணையில் கடனைக் கொடுத்து அதன் மூலம் அந்த நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்று அளித்து வருகிறது.

இந்த அடிப்படையில் தான் மேற்படி குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பும் அளிக்கப் பட்டது.

''மறுவாழ்வு என்ற பெயரால் மரண வாழ்வையா எங்களுக்கு வழங்க வேண்டும். அங்குதான் உரிமையிழந்து வாழ்ந்தோம் என்றால் இங்குமா எங்களுக்கு இந்த கதி?

யாரிடம் போய் எங்கள் குறையைச் சொல்லி அழுவது? எங்கள் குறையைக் கேட்க ஒரு நாதிகூட இந்த மண்ணில் எங்களுக்குகிடைக்கவில்லையே?''

இப்படி தங்களுக்கு நேர்ந்த அனுபவங்களை கொடிய துன்பங்களை எல்லாம் விவரித்தார் சந்தனம் பாவாடை என்பவர்.

அந்த குடும்பங்களை வழிநடத்தியும் அவர்களின் பிரச்சனைக்காகப் போராடி வருகிறவர்களில் ஒருவரான இவர் இலங்கையில் ஒம்போடை வெடிமுல்லை தோட்டத்தைச் சேர்ந்தவர்.

அங்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தோட்ட கமிட்டியின் தலைவராகஇருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவர் தங்கள் கதையை விவரித்தார்-

''நாங்கள் இந்தியாவுக்கு 1984 நவம்பரில் வந்தோம். நாங்கள் இராமேஸ்வரத்திலிருந்து திருச்சிக்கு வந்தோம். எங்களுக்கு வழங்க வேண்டிய நிவாரண உதவி எதுவும் வழங்கப்படவில்லை.

காப்பித் தோட்டத்தில் வேலை என நாங்கள் திருச்சியிலிருந்து அழைத்துச்செல்லப் பட்டோம். தாயகம் திரும்பிய கூட்டுறவு வங்கியில் பணி செய்யும் ஒஃபேல், ஜெயலஷ்மி ஆகியோர் எங்களை அழைத்துச் சென்றனர்.

பெங்களூரில் எங்களுடைய லக்கேஜ்களுக்கு தலா ரூபா 13/- நாங்கள் செலுத்தினோம். சாப்பாடு முதலானவற்றிற்கு கூட எங்கள் சொந்த பணத்திலேயே செலவு செய்தோம். மொத்தம் நாங்கள் 40 குடும்பங்கள் இருந்தோம்.

பெங்களூரிலிருந்து சக்லேஸ்புர என்ற ஊருக்கு புகைவண்டியில் சென்றோம் அங்கிருந்து லாரி மூலம் ஐப்பாவதி என்ற தோட்டத்திற்கும் (தேவங்கர அஞ்சல், சக்லேஸ்புர தாலுகா, ஹாசன் மாவட்டம்)

குடும்பங்கள் பல இடங்களுக்கு பிரித்து அனுப்பப்பட்டார்கள். உட்சிநெல்லி என்ற ஐசியாவதி தோட்டத்திற்கு அனுப்பப்பட்டது.

நாங்கள்போன இடம் பெரிய வனாந்தரம் போல இருந்தது. அது தமிழ்மக்கள் வாழும் இடம் என்று நினைத்தோம் ஆனால் அங்கு எங்களுக்கு இங்கு எப்படித் தான் வாழப் போகிறோம் என்ற அச்சம் தான் ஏற்பட்டது.

எங்களை கூட்டி வந்தவர்களிடம் தெரிவித்தோம் ''இங்கு எங்களால் தங்க முடியாது'' என்றும் தெரிவித்தோம்.

அவர்களோ, ''பயப்படாமல் இருங்கள், ஒரு வாரம் இருந்து பாருங்கள். திருப்தி இல்லை என்றால் எங்களுக்கு எழுதுங்கள் நாங்கள் மாற்று நடவடிக்கை எடுக்கிறோம்'' என்று தெரிவித்ததோடு ரூபா 100/- வழங்கி விட்டு சென்றார்கள்.

அந்த சிலதினங்களில் அங்கே இருக்கப் பிடிக்காமல் - அச்சப்பட்டு, 6 குடும்பத்தினர் தங்கள் உடமைகள் எதையும் எடுத்துக் கொள்ளாமல் கட்டிய துணியோடு போய் விட்டார்கள். நான்கு குடும்பங்கள் மட்டுமே மிஞ்சினோம்.

தோட்ட தொழிலாளி தொழிற்சட்டபடி சம்பளம் இதர சலுகைகள் அளிப்பதாக அப்பாயின்மென்ட் கொடுத்திருந்தார்கள். அதன் படி நாங்கள் பிற்பகல் 2 வரை தான் நாங்கள் வேலை செய்வோம். ஆயினும் கொடுக்கும் வேலையை செய்து முடிப்போம். வாரத்தில் 6 நாட்கள் வேலை கொடுக்க வேண்டும் 10-00 மணிக்கு நேந்ருக்கு விட வேண்டும் என்று கேட்டுக் கொண்டோம் முதலாளியும் உடன் பட்டார்.

நாங்கள் எதிர்பார்த்தபடி இவையெல்லாம் ஆறு மாதங்கள் ஒழுங்காக நடந்தன ஆறு மாதத்திற்கு பின் அதற்கு மாறாக நடக்கத்தொடங்கியது.

எங்களுக்கு மறுக்கப்பட்ட உரிமைகள், சலுகைகள் குறித்தும், இழைக்கப்பட்ட கொடுமைகள் குறித்தும் நான் காவல் துறை ஆணையாளர், மறுவாழ்வு இயக்குனர் வங்கி நிர்வாக இயக்குனர் உட்பட, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் கடிதங்கள் எழுதினேன்.

11-1-85 அன்று வங்கியிலிருந்து பிரேம்ராவ் என்பவர் வந்தார். அவர் தோட்ட முதலாளி வீட்டு கோழி கறி சாப்பிட்டு விட்டு சென்றார். அவர் எங்களது குறைகளை வங்கியில் எடுத்துச் செல்வார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை. இது குறித்து வங்கி இயக்குனருக்கு மீண்டும் எழுதினேன்.

சிலமாதங்களுக்குப் பின்னர் வங்கியிலிருந்து லோகநாதன் என்பவர் வந்துவிட்டுப் போனார். பின்னால் எதுவும் நடக்கவில்லை.

ஆரம்பத்தில் ரூ. 8.66 வீதம் சம்பளம்(குடும்பத்திற்கு மாதம் ரூ 480 வரை) கொடுத்தார்கள். போர்வையும், கம்பளியும் வழங்க வேண்டுமென்று கேட்டோம். தோட்ட உரிமையாளர் தயானந்த கௌடாவோ மருத்துவத்திற்கான பணம் கொடுக்க வேண்டி இருப்பதால் இரண்டாவதாக கம்பளி தரமுடியாது என்று கூறிவிட்டார்

(இன்னும் வரும்)




## ஒரு சமுதாயத்தை எதிர்க்கும் நடவடிக்கை:

# இதோ சில உதாரணங்கள் !

மக்கள் மறுவாழ்வு வைகாசி 1987 - இதழில் திரு. மோகன் குமார் அவர்கள் எழுதிய நடுப்பக்கக் கட்டுரைக்கு சாதகமாகச் சில குறிப்புகள், கூடலூர் வட்டாரத்தைப் பற்றியது,

கூடலூர் பகுதியைப் பொறுத்தவரை தாயகம் திரும்பியோர் குடியேற்றத்தை எதிர்ப்பவர்கள் மலையாளிகள் தான், மலையாளி - தமிழர் என்று பேதம் காட்டி பிரச்சனையை வளர்ப்பவர்கள் இவர்கள் தான்.

1981-ம் ஆண்டு பிற்பகுதியில் உதக மண்டலத்துக்கு வருகை தந்த இந்தியக் குடியரசுத் தலைவரிடம் ''தாயகம் திரும்பியோர் குடியேற்றத்தை நீலகிரியில் கட்டுப் படுத்த வேண்டும்'' என ஆதிவாசிகள் சங்கத் தலைவரால் (தூண்டப்பட்டு) மனுக் கொடுக்கப்பட்டுள்ளது.

(ஆதாரம்-வீரகேசரி, இலங்கை)

1986-சனவரி 1, 2, 3, 4-ம் தேதிகளில் கேரளத்திலிருந்து வெளி வரும் ''மலையாள மனோரமா'' என்ற நாளிதழில் தாயகம் திரும்பியவர்களை நீலகிரியில் குடியமர்த்தியது கலைஞர் கருணாநிதிதான், அதைத் தடை செய்ய வேண்டும் என்றும் நீலகிரியை யூனியன் பிரதேசமாக்க வேண்டும் என்றும் அதன் மூலம் தாயகம் திரும்பியோரை சிறுபான்மையினராக்கலாம் என்றும் எழுதியுள்ளது.

நடந்து முடிந்த பஞ்சாயத்துத் தேர்தல்களில் மலையாள மக்கள் வெளியிட்ட துண்டுப் பிரச்சாரங்களில் கூடலூரை தமிழகத்திலிருந்து பிரித்து கேரளாவுடன் இணைத்திட ஒட்டளிப்பீர் என எழுதியுள்ளனர்.

1986-ல் கூடலூர் அரசு மேல் நிலைப் பள்ளியில் கல்வி கற்பிக்கும் மலையாள பிரிவு பொறுப்பாசிரியை திருமதி மரியம்மா பால் அவர்கள்,

1. மலையாளப் பிள்ளைகள் தமிழகத் தாய் வாழ்த்துப் பாடல்களைப் பாடக் கூடாது எனவும்,

2. தலைமை ஆசிரியர் தமிழில் எழுதும் சுற்றறிக்கைகளை மலையாள ஆசிரியர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடாது எனவும் மிகப்பெரிய போராட்டம் நடத்தினர்.

விளக்கம் கேட்ட தமிழாசிரியர்கள் உடன் இடம் மாற்றப் பட்டனர்.

மலையாளிகள் கூடலூர் பகுதியில் உள்ள (வழக்கில் உள்ள) நிந்தகம் காணிகளை 50, 60 ஏக்கர் என வளைத்துப் பிடித்து தமதாக்கிக் கொள்வார்கள். யாரும் முறைப்பாடு செய்தால் நிலம்பூருக்கு ஓடிப்போய் ''நிலம்பூர் கோவிலக'' அதிகாரியிடம் பழைய ஒரு தேதியில் பத்திரம் எழுதி வாங்கிக் கொண்டு வந்து உரிமை கொண்டிருக்கிறார்கள், இந்த அரசாங்கமும் ஏற்றுக் கொள்வது என்பது வழக்கமாக இருக்கிறது.

தாயகம் திரும்பியோர் அக்காணியில் ஒரு அங்குலம் குடியேறினாலும். அதற்கு உரிமை கோரி உள்ளூர்வாசிகள் முறைப்பாடு செய்து காவல்துறையினரைக்கொண்டு தடுத்துவிடுவார்கள்,

நிலம்பூர் கோவிலகத்தில் எழுதி வாங்கிக் கொண்டு வந்திருக்கும் ஒப்பந்தப் பத்திரங்களில் காணப்படும் நில அளவை எண் வேறாகவும் குடியேறி இருக்கும் நிலத்தின் நில அளவை எண் வேறாகவும் இருக்கும்.

நிலம்பூர் கோவிலக் காணி வழக்கில் உள்ளவற்றில், சலி வயல், தேவர் சோலை, உப்பட்டி சேரம்பாடி பகுதிகளில் அடிக்கடி தாயகம் திரும்பிய தமிழர்கள் துன்புறுத்தப் பட்டு, அநீதிக்கு ஆளாக்கப்படுகின்றனர்.

கூடலூர் பேரூராட்சியின் 4 ஏக்கர் நிலம் மயானம் கூட சிறிது சிறிதாக ஒரு மலையாளியின் தேயிலைத் தோட்டமாகி இப்போது 1/4 ஏக்கருக்கும் குறைவான அளவே மிகுதி உள்ளது.

குடும்பக் கட்டுப்பாட்டில் நீலகிரி மாவட்டம் முதலிடம் வகிப்பதற்குக் காரணம் தாயகம் திரும்பியோரை கட்டாயக் குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆளாக்குவது தான். நிலம் தருவதாகவும் ஏமாற்றுகின்றனர்.

வெளி மாநிலங்களுக்கு எழுதி வருவோர் நீலகிரியில் குடியேற அனுமதிக்கப்படுவது இல்லை, ஆனால் நீலகிரிக்கு வருவோரின் அரசு உதவிகள் வெளி மாநிலங்களில் வழங்கப் படுகிறது.

புதிய முடிவின் படி தமிழகத்தில் நீலகிரி மாவட்டத்தில் அரசு உதவிகளைப் பெற்றுக் குடியமரத் தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் வேறு எந்த மாநிலத்திலும் குடியேறலாமாம். நீலகிரி தடை செய்யப் பட்ட பிரதேசமாக அறிவிக்கப் பட்டுள்ளது.

மனிதனின் அடிப்படை உரிமையான உணவுப் பங்கீட்டு அட்டை வெளி மாவட்டத்திற்கு எழுதி வந்தவர்களுக்கு நீலகிரியில் வழங்கப் படுவது இல்லை,

செயலாளர்,
தமிழர் நலப் பாதுகாப்பு
இயக்கம்
கூடலூர்
நீலகிரி மாவட்டம்

❋

# மக்கள் மறுவாழ்வின் சேவை . . .

தாயகம் திரும்பியோர்களின் நல்வாழ்வுக்காக வெளிவரும் 'மக்கள் மறுவாழ்வு, கண்டு மகிழ்ச்சியடைந்தேன்.

தாயகம் திரும்பியோர்களின் பிரச்சனைகளை வெளியிடுவதோடு அவர்களது கல்வி பொருளாதாரத்தை வளர்க்கும்' வகையில் பல விஷயங்கள் வெளிவருவது பாராட்டுதற்குரியது.

மேலும், மேலும் மக்கள் மறுவாழ்வு தாயகம் திரும்பிய மக்களுக்கு சேவையாற்றி வர வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

—கிருஷ்ணசாமி
ஈரோடு

# நீதி சரிகிறது

## பத்திரிகை பார்வையில்

கடந்த இரண்டு மாதங்களாக பாதுகாப்பு வலை, பெரியாஸ்பத்திரியை அகற்றுதல், அத்தியாவசியப் பொருட்கள் தடை என்று இலங்கை அரசு யாழ்ப்பாண மக்களை அலைக்கழித்து விமானங்கள் குண்டு வீசி அக்கிரமங்கள் செய்து செய்து வருகிறது.

இந்திய அரசும் யாழ்ப்பாண மக்களுக்கு உதவும் வகையில் முதலில் விமானம் மூலம் உணவு வினியோகம் செய்தது. மீண்டும் 24ந் தேதியும் கப்பல் மூலம் உணவுப் பொருட்கள் மற்றும் அத்திய பொருட்களை வினியோகித்துள்ளது.

ஆயினும் இலங்கை அரசு தனது தாக்குதலை நிறுத்தவில்லை. இந்த கொடுமையை இலங்கையிலிருந்து வெளிவரும் வீரகேசரி நாளேடு (6 5 87) தனது தலையங்கத்தில் சுட்டிக் காட்டுகிறது.

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியை மூடி விட அரசாங்கம் முடிவு செய்து விட்டது. இம் முடிவுக்கமைய ஆஸ்பத்திரியின் பல்வேறு சிகிச்சைப் பிரிவுகளை வேறு இடங்களுக்கு இடமாற்றம் செய்ய உத்தரவிடப் பட்டுள்ளது. இந்த ஆஸ்பத்திரியை வேறு இடத்திற்கு இடமாற்றம்செய்ய கடந்த சில காலமாக ஆலோசிக்கப்பட்டபோதிலும் பொது மக்களின் எதிர்ப்பு காரணமாக நடவடிக்கைகள் பின்தள்ளப்பட்டு வந்தன. இறுதியில் 'விடாப்பிடியாக' இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

வடமாகாணத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்திலுள்ள இந்த பெரியாஸ்பத்திரி நவீன வசதிகளைக் கொண்டிருப்பதுடன், போதனா ஆஸ்பத்திரியாகவும் செயற்பட்டு வந்தது. அத்துடன் மன்னார் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்ட மக்களுக்கும் சேவையாற்றி வருகிறது. பிணியாளர்களுக்குத் தேவையான சகல சிகிச்சைகளும் ஒரே இடத்தில் வழங்கப்பட இந்த ஆஸ்பத்திரி உறுதுணையாக விளங்குகிறது,

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமைச் சுற்றியுள்ள ஆயிரம் மீற்றர் பிரதேசத்தை, மக்கள் வாழமுடியாத பிரதேசமாக அரசாங்கம் பிரகடனப்படுத்தியிருக்கிறது. இவ்வாறு பிரகடனப் படுத்தப்பட்ட எல்லைக்குள்ளேயே இந்த ஆஸ்பத்திரியும் இருக்கிறது. இதனைத் தீவிரவாதிகள் ஒரு தளமாகப் பயன்படுத்தி கோட்டை முகாமைத் தாக்கி வருகின்றனர் என்பதே அரசாங்கத்தின் குற்றச் சாட்டாகும்.

ஆனால் இராணுவத்தினரின் 'ஷெல்' தாக்குதல்களுக்கு இந்த ஆஸ்பத்திரி பலதடவை இலக்காகியுள்ளது. ஒருமுறை விழுந்த ஷெல்களினால் ஒன்பது பேர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர். கட்டிடமும் சேதத்திற்குள்ளாகியது. இதனால் பொது மக்களிடமிருந்தும் மருத்துவர்களிடமிருந்தும் பலத்த கண்டனக் குரல் கிளம்பியது, பாதுகாப்பற்ற நிலையில் மருத்துவர்கள் கடமைசெய்ய மறுத்தனர்.

ஷெல் தாக்குதல்களினால் ஆஸ்பத்திரி பாதிக்கப் படுவதைத் தவிர்க்கும் வகையில், கோட்டை இராணுவ முகாமை வேறு இடத்திற்கு மாற்றும்படி கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அரசாங்கம் அதற்குச் செவிமடுக்கவில்லை மாறாக, ஆஸ்பத்திரியையே மூடிவிட முடிவெடுத்துள்ளது மக்கள் எத்தனை துன்பத்திற்குள்ளானாலும் தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என்ற நிலையிலேயே அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்திருக்கின்றன.

வடக்கில் ஐந்து மாவட்டங்களில் பரந்து வாழும் பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன் அடைந்து வரும் ஆஸ்பத்திரியை மூடிவிடுவதன் மூலம், பிணியாளர்கள் எக்கேடும் கெட்டுப் போகட்டுமென்ற நிலைப்பாட்டிற்கு அரசாங்கம் வந்திருப்பது கண்டிக்கத்தக்கது. தனது நோமேன்ஸ் 'லான்ட்' என்ற கொள்கையை நிலைநாட்ட இன்னும் எத்தனை நிறுவனங்களுக்கு இப்படி மூடுவிழா செய்ய அரசாங்கம் உத்தேசித்துள்ளதோ தெரியவில்லை.

கொரில்லா யுத்தம் நடைபெறும் இடங்களில் இருந்து மக்கள் குடியிருப்புகளை அப்படியே ஓட்டு மொத்தமாக வேறு இடங்களுக்கு குடிபெயர்ப்பது இஸ்ரேலியர் கையாளும் போர்த் தந்திரமாகும். இன்று வடபகுதியில் மக்கள் ஒன்று கூடும் இடங்களை எல்லாம் மூடிவிடும் புதிய போர்த் தந்திரம் கையாளப் படுகிறது. குண்டுவீச்சின் காரணமாகவும் ஷெல் தாக்குதல்களினால் பாதிக்கப் படும் மக்களுக்கு உரிய சிகிச்சையை ஒரே இடத்தில் பெறக் கூடிய வாய்ப்பும் மறுக்கப்படுகிறது.

எரிபொருள் தடை, கடல் வலயத் தடை, தகவல் தொடர்புத் தடை போக்குவரத்து தடை, பொருளாதாரத் தடை ஆகிய தடைகளுடன் ஆஸ்பத்திரி சிகிச்சைக்கும் இப்போது தடை போடப்பட்டுள்ளது. 'வேதனைதான் மிச்சம்' என்ற நிலைக்கு மக்களை, மேலும் மேலும் தள்ளி விடுவதால் அரசாங்கம் எதிர்பார்க்கும் நோக்கங்களுக்கு எதிரான பலனே கிட்டும் என்பதை சுட்டிக் கட்ட விரும்புகிறோம்

ஒற்றை இரட்டை பிடித்து வாழ்ந்த வாழ்க்கை இன்று கச்சை கட்டிச் சந்தியில் நிற்கும் நிலைக்கு நாட்டைத் தள்ளியுள்ளது. நடை பெறும் காரியங்களின் போக்குக்கு நியாயமே இல்லையா என்ற கேள்வியே சகல கோணங்களிலிருந்தும் எழுகிறது, முலை சரிந்தால் எப்பொழுதும் வயிறுதான் தாங்கிக் கொள்ள வேண்டும் என்பது முதுமொழி இன்று நாடே நீதியின்றிச் சரிகின்ற நிலையில் மக்கள் எவ்வாறு இதனை தாங்கிக் கொள்ள முடியும்?

ஆயிரம் மீற்றர் தடை வலய பிரகடனத்தை அமுல் நடத்தும் வேகம் இப்பொழுது அரசாங்க நடவடிக்கைகளில் தொனிக்கிறது. சகல இராணுவ முகாம்களையும் சுற்றிப் பாதுகாப்பு வலயத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பதுதான் நிலைப்பாடு என்றால் அங்கு வாழும் மக்கள் எங்கு போவது. வீடு, வாசல், வியாபார நிலையங்கள் : அத்தனையையும் ஒரு கணத்தில் எங்கு மாற்றுவது. இதனை தமிழ் பேசும் மக்கள் மீது வக்கிர உணர்வோடு மேற்கொள்ளப் படும் எதேச்சாதிகாரமான செயலாகவே சமாதான விரும்பிகள் கருதி விசனப்படுகிறார்கள் ! O

ஏறக்குறைய ஒரு வருடம் கடந்த பின்னரும் கூட அவர்களது வாழ்வில் எந்த ஒரு முன்னேற்றமோ, மாற்றமோ காணப்படாத நிலையில், மோசமான சுற்றுப்புற சூழல்களின் பின்னணியில், கொடைக்கானலின் அடர்ந்த காடுகளின் உள்ளேயும் கூட வாழ்ந்து வருகிறார்கள்.

'எதிர்காலம் இன்பமயமாகும்' என்று அரசின் நடவடிக்கைகளை சதா சர்வ காலமும் எதிர்பார்த்து ஏங்குகிறார்கள். இவர்களில் பாதிப்பேர் அரசு புறம்போக்கு நிலங்களை விவசாயத்திற்கென 'பட்டா' உரிமையோடு வழங்குவதாகக் கூறிய வார்த்தைகளை நம்பி காத்திருக்கிறார்கள். தங்களது குறைகளை எடுத்துச் சொல்ல, அவர்களது வாக்குறுதிகளை நிறைவேற்றக்கோரி மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன் திரண்ட [போது அவர்களில் 125 பேர் கடந்த ஏப்ரல் மாதம் கைது செய்யப்பட்டார்கள்.

ஸ்ரீமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தின் பேரில் இந்தியா திரும்பி, இந்தியக் குடியுரிமைப் பெற்ற இந்தக் குடும்பங்கள், பல வருடங்களாக கொடைக்கானலின் மலைப் பிரதேசங்களில் கொத்தடிமைகளாக வாழ்ந்து வந்தவர்கள். இவர்களை 'மீட்டு மனிதாபிமான அடிப்படையில், வேலை வாய்ப்பளித்து, நல்லதொரு வாழ்வினை அமைத்துத் தர முன் வந்த தமிழக அரசின் திட்டங்கள் சில இடைத்தரகர்களாலும், தனியார் 'காண்டிராக்டர்'களாலும் சீர்குலைக்கப்பட்டு வருகின்றன.

முன்னாள் உதவி ஆட்சித் தலைவர் திரு. குர்னிஹால் சிங் அவர்களின் முறையான, மனிதாபிமான நடவடிக்கைகளால், கொடைக்கானல் கிராமப் புறங்களில் உபயோக மற்றுக்கிடக்கும் உருளைக்கிழங்கு பண்ணை, கூக்கால் பகுதியில் 850 ஏக்கரா நிலம், மன்னவனூர் பகுதியில் மத்திய கம்பளி ஆடுமற்றும் கம்பளி ஆராய்ச்சிப் பிரிவில் 400 ஏக்கரா நிலம் போன்றவைகளை வழங்கலாம் என்ற இவரது கருத்து, இந்த அலுவலர்களால் புறக்கணிக்கப் பட்டது.

# கொடை கொத்தடிமைத் தொழிலாளர்கள்: விடுவிக்கப்பட்டவர்கள்

**கடந்த ஆண்டு மார்ச் மாதம், உயர் நீதிமன்றத்தின் மூலம் கொடைக்கானலில் கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட 157 தாயகம் திரும்பியோர்களின் இன்றைய நிலைமை என்ன?**

**இவர்கள் குறித்து இந்தியன் எக்ஸ்பிரஸ் நிருபர் டி.என். கோபாலன் அவர்கள் (10-5-87) எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.**

கொத்தடிமைகள் விடுவிப்பு சட்டத்தின் நல்வாழ்வு விதிமுறைகள் அனைத்துக் கொடைக்கானல் பகுதி வாழ் மக்களின் வாழ்க்கை முறையைப் பொறுத்தமட்டில் முழுதும் மீறப்பட்டுள்ளன.

முன்னாள் தலைமை நீதிபதி திரு. பி. என். பகவதி கல்கத்தா வார இதழ் ஒன்றுக்கு அளித்திருக்கும் பேட்டி ஒன்றில் "சட்டரீதியான நடவடிக்கைகளின் படி, அந்தக் குடும்பங்களை கொத்தடிமைத் தனத்திலிருந்து முழுவதுமாக மீட்டு, விவசாய நிலங்கள் பட்டா உரிமையோடு வழங்கப்படுவதோடு, மருத்துவ உதவிகளும் வழங்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளோம் (சண்டே மார்ச் 15,21-1987) என்று கூறியுள்ளார். இது குறித்து திரு பந்துவா முக்தி மோர்சா என்பவர், கடந்த டிசம்பர் 16ம் தேதி தாக்கல் செய்திருந்த ரிட்மனுவை' நிராகரித்த உச்ச நீதி மன்றம் 'தமிழக அரசு கொத்தடிமைகள் மீட்பு நல்வாழ்வுப் பணித் திட்டங்களை முறைப்படி, உடனடியாக அமுல் படுத்தியிருக்கும் என்பதில் எங்களுக்கு கொஞ்சமும் சந்தேகமே இல்லை.'' என்றும் குறிப்பிட்டிருக்கிறது.

இந்த அறிக்கையில் எந்த விதமான உண்மையுமில்லை என்பதுதான் இன்றைய நிலை. கொடைக்கானலில் புதிய குடியிருப்புகளுக்கு இடம் பெயர்ந்தோரில் 33 வயதாகும் திரு. வெங்கட்ராமன் என்பவரை சந்தித்தபோது - அவர், முன்பு எங்களுக்கென்று கொஞ்சமாவது கௌரவம் இருந்தது. இப்போதுதான் நாங்கள் உண்மையில் அரச அடிமைகளாக வாழ்கிறோம். முன்பு எங்களுக்கான அவசியத் தேவைகளை எங்களது உடலுழைப்பின் மூலமாவது பெற முடிந்தது. இன்று அரசாங்கத்தின் உதவியை எதிர்பார்த்து ஏமாற வேண்டிய நிலையில் வாழ்கிறோம். இது அர்த்தமற்றது. பொய்யான வாக்குறுதிகளால் எங்களை ஏமாற்றி வருவதில் என்ன பயன்? இவ்வளவு கொடுமையான நிலை எங்களுக்கு ஏற்படும் என்பது எங்களுக்குத் தெரிந்திருந்தால் நாங்கள் திரு. குர்னிஹால் சிங் அவர்களை அணுகி இருக்கவே மாட்டோம் என்றார்.

இன்று திரு. குர்னிஹால் சிங் அவர்களைத் தவிர, ஏனைய அனைவராலுமே கைவிடப்பட்ட நிலையில் இந்த இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள். இவர்களது எதிர்காலப் பிரச்சினை பற்றிய அறிக்கையொன்று உச்ச நீதி மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட உடனேயே, இது பற்றி ஆராய, அவர்களது திட்டங்கள் சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதைக் கண்டறிய கடந்த அக்டோபர் மாதம் ஒரு குழு நியமிக்கப் பெற்றது. கொடைக்கானல் பகுதியில் சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்தக் குழு, பின்னர் பெங்களூரில் கூடி தனது முடிவை வெளியிட்ட போது, இவர்களுக்கு வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கும் வேலைகள் நவம்பர் மாத இறுதியிலும், விவசாய நிலம் வழங்குவதிலும் தொடர்பான வேலைகள் டிசம்பர் மாத இறுதியிலும் முடிந்துவிடும் என குறிப்பிட்டிருந்தார்கள். இவர்கள் குறிப்பிட்டிருக்கும் இந்தக் காரியங்கள் எதுவும் இதுவரை நடைபெறவில்லை. இந்தக் குழுவினர் இரண்டாவது முறையாக எங்கேயும் கூடியதாகவும் தெரியவில்லை.

இந்தக் குழுவில், தலா மூன்று பிரதிநிதிகள் வீதம் ஒவ்வொரு 'மீட்கப்பட்ட' குடும்பத்திலிருந்தும் அங்கம் வகிக்கவேண்டும் என்ற விதிமுறைகள் இருந்தும் இது பற்றியோ, அல்லது இந்தக் குழுவின் நடைமுறைகள் பற்றியோ அந்தக் குடும்பத்தினர்கள் யாருமே அறிந்திருக்கவில்லை, இந்த ஆய்வுக் குழுவினர் நடத்தியதாகக் கூறப்படும் இரண்டொரு கூட்டங்களுக்கும் இவர்கள் அழைக்கப்படவில்லை.

'கபார்ட்' அமைப்பின் நிர்வாக இயக்குனரும், வெளிநாட்டு நிதியுதவிகளைப் பெற்று தன்னிச்சையாக தொண்டாற்றி வரும் நிறுவனங்களின் நிதிப் பங்கீடு பற்றிய மத்திய குழுவின் தலைமைப் பொறுப்பில் இருப்பவருமான திரு. டி. பாலகிருஷ்ணன் அண்மையில் திண்டுக்கல்லில், (அண்ணா

# மறந்து போனவராயினர் !

மாவட்ட நிர்வாக தலைமை அலுவலம் இதன் கீழ்தான் கொடைக்கானல் வருகிறது) பத்திரிக்கை நிருபர்களைச் சந்தித்தபோது, (அக்டோபர் மாதம்) "இந்த விதமாக மறுவாழ்வுப் பிரச்சினைகளுக்கென்றே நியமனம் பெறுகின்ற பிரதிநிதிகள், அந்த குறிப்பிட்ட மக்களிடையே, திட்டங்கள் செயல் வடிவம் பெறுவதற்கு முன்பாகவே அது குறித்து விவாதிக்க வேண்டும். தவிர, திட்டங்கள் யாவும் அதனால் பயன் பெறப்போகும் மக்களின் வசதிகளுக்கேற்ப செயலாக்கம் பெற வேண்டும்...." என்று கூறினார். கொடைக்கானல் பகுதியில் மறுவாழ்வு பெற்ற மக்கள் அனைவருமே, மறுவாழ்வு தொடர்புடைய தா், தன்னிச்சையாக செயல்படும் சமூக சேவை அமைப்புகளால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். கொடைக்கானல் குடியமர்வுத் திட்டத்தில் வாழ்வு பெற்ற திரு. தட்சிணாமூர்த்தி என்பவர். "இந்த இயக்கங்கள் பணத்துக்காகவே இயங்குகின்றன. இவர்கள் ஒரு போதும் எங்களுக்கு எந்த நன்மையும் செய்யப் போவதில்லை." என்றார்.

இந்த கூட்டு மோசடி நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சிகரம் வைப்பது போன்று நடந்த சம்பவங்களின் காரணகர்த்தா அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. மாதவன் நம்பியார் திரு. குர்னிஹால் சிங் மீதான அவதூறுகளை பரப்பியதில் பெரும் பங்கு இவருக்கு உண்டு பிரமாதமான பல திட்டங்களுடன் இவர் உச்சநீதிமன்றம் சென்றது என்பது யாரும் அவ்வளவாக அறிந்திராத விஷயமாகும்.

உச்ச நீதிமன்றம், நியமித்த பாஷ்சா விசாரணைக்குழு திரு. மாதவன் நம்பியார் தயாரித்த 1000 ஏக்கரா தேயிலைத் தோட்ட திட்டம், 200 ஏக்கரா வீட்டு வசதித் திட்டம், இரண்டையுமே அங்கீகரித்தது. இந்த வீட்டு வசதித் திட்டம் 1986, ஜூன் 2ம் தேதி ஆரம்பிதது விடும் என்று பாஷ்சா விசாரணைக் குழுவிடம் கூறினார். ஆனால் இரண்டு மாதங்கள் கழித்து, 'ஆக்கிரமிப்புப் பிரச்சினைகள் காரணமாக இந்தத் திட்டம் கைவிடப்படுகிறது' என்றும் தேர்ந்தெடுக்கப் பட்ட பிரதேசத்தில் தேயிலை வளர்ச்சிக்கான சாத்தியக் கூறுகள் இல்லை' என்றும் அறிக்கை வெளியிட்டார்,

அக்டோபரில் கூடிய திட்டமிடல் மற்றும் மறுபரிசீலனைக் குழுக் கூட்டத்திலும், பத்திரிக்கையாளர் மத்தியிலும் பேசிய திரு. மாதவன் நம்பியார், கூக்கால் பகுதியில் 200 ஏக்கரா விவசாய நிலமும், மன்னவனூர் பகுதியில் 1000 ஏக்கரா நிலமும் 'மீட்கப்பட்ட' மக்களுக்கு ஒதுக்கப்பட அதற்கான பூர்வாங்க வேலைகள் ஏறக்குறையு முடிந்துவிட்டன' என்று கூறினார். ஆனால் இந்தத் தகவல் வெளியான உடனேயே திரு. குரியன் ஆபிரஹாம் (கூப்காண்டிராக்டர்ஸ் அஸோஸியேசன் தலைவர்) உயர்நீதி மன்றத்தில் ஒரு மனு மூலம் இதனை எதிர்த்தார். குறிப்பிடப்பட்ட 180 ஏக்கரா நிலத்தில் அரசு அனுமதியுடன் தான் 'புளுகம்' பயிரிட்டிருப்பதாக கூறினார் இதன் பின்னர் திரு. நம்பியார் மன்னவனூர் திட்டத்தைக் கைவிட்டு விட்டார். திரு. குரியன் அவர்களின் மனு உயர் நிதிமன்றத்தில் நிராகரிக்கப் பட்ட பிறகும் திரு. மாதவன் நம்பியார் தனது திட்டத்தைக் கண்டு கொள்ளவே இல்லை.

கடைசியாக முயற்சி திரு.குர்ஹால் சிங் 'மீட்கப்பட்ட தொழிலாளர்களின் தலைவர்களை அழைத்துக் கொண்டு கூக்கால் மற்றும் சுற்றுப் புறங்களிலுள்ள நல்ல, விவசாயம் செய்யக் கூடிய நிலங்களைக் காட்டினார். இந்த இடங்களில் வாழ ஒப்புக் கொண்டு, அவர்களில் 75 குடும்பங்கள் சிறு, சிறு பிரிவினவராக ஓரளவு வசதியுள்ள இடங்களில் உடனே குடியேறினார்கள்.

திரு. குர்னிகால் சிங் இந்த நிகழ்ச்சியின் சில நாட்களில் உடனே மாற்றப்பட்டார். பிப்ரவரி மாதக் கடைசியில் அவரது மாற்றத்திற்குப் பின்னர் அந்த மாவட்ட நிர்வாகம் இந்த மக்களோடு மீண்டும் 'கண்ணாமூச்சு' விளையாட ஆரம்பித்தது புதிய அலுவலர்களால் அனுப்பப்பட்ட புதிய நில அளவையாளர் குழு, விவசாயம் செய்வதற்கு தகுதியில்லாத நிலங்களை குறியிட ஆரம்பித்தது.

"உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் காட்டிய இடங்கள் அனைத்துமே தனியார் நிலங்கள்" என்று நில அளவையாளர்கள் கூறியதைக் கேட்டதுமே அதிர்ச்சியடைந்து விட்டோம்" என்றார். அமல்ரா என்ற தொழிலாளி "கைவிடப்பட்டுக் கிடந்த இடங்களில் இப்போது குடிசைகள் ஒன்றிரண்டு தோன்றியிருப்பதோடு, சில இடங்கள் பண்படுத்தப் பட்டு இருப்பதுவும் வியப்பிற்குரியது. பணம் கைமாறியிருப்பதோடு, எங்களுக்கெதிராக யாரோ சதி செய்வதையும் உணர முடிகிறது, நாங்கள் இது பற்றி ஆட்சியாளரிடம் முறையிட்டபோது." நாங்கள் எதைத் தருகிறோமோ அதைப் பெற்றுக் கொண்டு, அதற்கு அனுகூலமாக நடந்து கொள்ளுங்கள்" என்று கூறினார்,

இந்த நிலையில் திரு. நம்பியாரின் இடமாற்றம் இவர்களிடையே மகிழ்ச்சியைத் தோற்றுவித்ததில் என்ன வியப்பு இருக்க முடியும்.?

திரு. குர்னிஹால் சிங் மாற்றப் பட்ட பிறகும் கூட இந்த மக்களின் பிரச்னைகள் தீர்க்கப் படவில்லை. ஜூன் மாதம் வெளியான ஒரு நீதிமன்ற உத்தரவில்." மீட்கப்பட்ட மக்களின் முறையான பிரச்னைகள் முழுமையாகதீர்க்கப்படும் வரையில் அவர்களுக்கு உணவு உடை, இருப்பிடம், மருத்துவ வசதி போன்றவைகள் தொடர்பான உதவிகளைச் செய்ய திரு, குர்னிஹால் சிங் பணிக்கப்படுவார்" என்று ஆணித்தரமாக குறிப்பிட்டிருந்தது.

இந்த அறிக்கையிலிருந்து, நீதிமன்றம் கூட இந்தப் பிரச்னையைப்பற்றி அக்கறை காட்டவில்லை என்று தெளிவாகத் தெரிகிறது மீட்கப்பட்ட குடும்பத்தினர், அவர்களது நண்பர்கள் திரு. பி. என். பகவதிக்கு எழுதிய கடிதத்தில் (டிசம்பர் மாத நிராகரிப்புக்குப் பின்) 'காண்டிராக்டர்கள், கம்பெனிகள் போன்றவற்றின் முறைகேடான நடவடிக்கைகளை அறிந்தும் நீதிபதிகளால் எவ்வாறு மௌனமாக இருக்க முடிகிறது,?" என்று கேட்டிருந்தார்கள். இன்று வரை பதிலில்லை.

இந்த மக்கள் நகருக்குச் செல்வதானால் 14 கி. மீ கரடு முரடான பாதையில் போக வேண்டும். திரு. குர்னிஹால் சிங் பதவிக்காலத்தில் இவர்களின் வீடுதேடி விநியோகிக்கப்பட்ட அரிசி கூட இன்று அவ்வாறு வழங்கப்படுவது நிறுத்தப்பட்டு, வேறு தொலை தூரத்துக்கு அந்த வழங்குதுறை மாற்றப்பட்டு விட, அங்கிருந்து அந்த அரிசியை கொண்டு வருவதற்கு அந்த தொழிலாளர்கள் பணம் செலவழிக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது,

அரசாங்க அறிவிப்பின்படி 1978ம் ஆண்டில் 232 குடும்பங்கள் கொத்தடிமைகளிலிருந்து மீட்கப்பட்டு கொடைக்கானல் அருகே வடகௌஞ்சியில் குடியமர்த்தப்பட்டுள்ளதாக தெரிகிறது. தலா இரண்டு ஏக்கரா வரண்ட நிலமும், 500/- மற்றும் நில அபிவிருத்தி வங்கியினால் வழங்கப்படும் கடனுதவியும் வழங்கப் பட்டதாக தெரிகிறது.

இப்போது சுமார் 48 குடும்பங்களே அங்கு வாழ்ந்து வருகிறார்கள்.மீதி என்னவாயிற்று?

சரித்திரம் மீண்டும் தானாகவே திரும்புமா? O

# தோட்டப் புறத்து (நாட்டுப்) பாடல்களில் காதல் சுவை

## (12)

தாங்கள் கூடிப்பேசி மகிழ்ந்த இடத்தை பார்க்கும் போது உள்ளம்குமுறுகிறது. அது பாழ்பட்ட இடமாக தோன்றுகிறது.

"நெத்திக்கான் ஓரத்தில
நெடுஞ்சவுக்கு பள்ளத்திலே
வாழைப்பழம் தின்னலெக்கு
பாழாய்க்கிடகுதடா"

அவளுக்கு மட்டுமா? அவனுக்கும் தான்

"கூடி இருந்த இடம் - குட்டி
கும்மாளம் போட்டஇடம்
வாழப்பழம் தின்ன இடம்
பாழாய்க் கிடக்குதடி"

(வேறு)

"கூடி இருந்த இடம்
கும்மாளம் போட்ட இடம்
பாடிமகிழ்ந்த இடம்
பாழாய் கிடக்குதடி"

அந்த இடத்தில் நீண்டுயர்ந்த சவுக்கு மரங்கள் நிற்கின்றன; தேயிலைச் செடிகள் அடர்ந்திருக்கின்றன. அவர்களின் காதலுக்கு சாட்சியாக நின்ற அவைகளை எல்லாம் அவள் துணைக்கழைக்கிறாள் —

"சவுக்கு மரமே
சாமிதுரைத் தேயிலையே
நெருப்புக்குச்சி மரமே
நின்னு முகம் வாடுறனே"

அவன் அந்த தோட்டத்தை விட்டு வேறு தோட்டத்திற்கு போகப் போகிறான். அவளுக்கு துயரம் தாங்க முடியவில்லை. அவள் சொல்கிறாள் —

"ஆசைவச்சேன் உன் மேலே
அரளி வச்சேன்தோட்டத்தில
பூவெடுக்கும் வேளையில
போறீங்க தோட்டம் விட்டு"

நீங்கள் போகிறீர்கள். நான் வைத்த ஆசை நிராசைதான். இனி சாவதை தவிர வேறு இல்லை என்கிறாள். அதை எப்படி உணர்த்துகிறாள். போகும் வேளையில் அரளியும் பூக்கப்போகிறது பூடகமாக சொல்கிறாள். அரளி மலரை அரைத்து குடித்தால் மரணம். எத்தனை பேரையோ இது மரணத்திற்கு அழைத்துச் சென்றிருக்கிறது.

அவனோ அவளுக்கு ஆறுதல் கூறுகிறான் —

"தோட்டம் விட்டு போறேன்னு
துயரப்பட்டுநிக்காதே
போட்டிடுவேன் போசுகாடு"

என்று.

ஊரெல்லாம் பேராகி விட்டது. இனி இந்த தோட்டத்தில் வாழ முடியாது. அதிலேயும் அவள் ஆசைப்பட்டது - கூடி, களித்ததும் 'பெரிய இடம்' தான்.

பேரெடுத்தப் பின்னால் இங்கே மானத்தோடு வாழ முடியாது. ஒரு முடிவுக்கு வருகிறாள். அவனிடமும் உரைக்கிறாள் —

"நெஞ்சாலே வகுக்கோட்டு
நெறமுள்ள லேஞ்சுகட்டு
உருலோசு சங்கிலிக்கு
உங்களாலே பேரெடுத்தேன்'

"பேரானே, ஊரானே
பெரிய எழுத்து சொல்லானே
வாங்க கணக்கப்பிள்ள
வதுளைப்பக்கம் போய்
பொழைப்போம்.

காதலில் ஏமாற்றப்படுகிறவர்களும் உண்டு. காதலிப்பதாக நடித்து தமது இச்சையைத் தீர்த்துக்கொண்டு கைவிட்டு விடுவதும் உண்டு

இது தோட்டப்புறங்களில் நிகழும் கட்சிகள் தான்.

அவனை முழுமையாக அவள் நம்பி காதலித்தாள். அவனுக்காக என்னென்னவோ செய்தாள். ஆனால்-

"பாலை ஒழுக விட்டேன்
பன்னீரை சிந்த விட்டேன்
வாசமுள்ள சவுக்காரத்தை
வந்தவர்க்குத் தானமிட்டேன்"

முன்னே அவள் கரும்பாக சர்க்கரை பாகாக இனித்தாள், பேச்சில் கிளியாக சுவைத்தாள். ஆனால் இப்போதோ அவனுக்கு அவள் —

"வேப்பங்காய் கசப்பானேன்
வெற்றிலையும் நஞ்சானேன்
நானும் கசப்பானேன்
நம்பினேனே என்ன செய்வேன்"

---

'தேனூரன்'

அவள் காதலித்தது தோட்டத்துரையை. அவனும் அவளுக்கு வேண்டியதை எல்லாம் பரிசாக வழங்கினான் அவற்றிற்கு எல்லாம் அவள் மயங்கி மோசம் போய் விட்டாள்

"கன்னங் கருத்த தொற
கைநிறைய தந்த தொற
என்னைக் கெடுத்த தொற
இருக்குறானே இலங்கையில"

தன் ஏமாற்றி விட்ட அவன் மீது ஆத்திரம் தீரவில்லை அவனை சபிக்கிறாள் —

"என்னைக் கெடுத்தியடா
எனக்கு மருந்து வச்சியடா
என் சொகுச கெடுத்தியடா
சுத்தாதா என் பாவம்"

அவன் அவளை நம்பினான். அவளுடைய மயக்கும் மொழிகளுக்கு மனதை பறிகொடுத்தான். ஆனால் அவள் அவனை ஏமாற்றி விட்டாள். அவளோ,

"காலு வளர்ந்த குட்டி
என்னை கைலேயும் போட்ட குட்டி
போலீச கண்ட குட்டி
போதுமடி உன் உறவு"

"காலு வளர்ந்த குட்டி
கச்சேரி கண்ட குட்டி
போலீச கண்ட குட்டி,
போதுமடி உன் உறவு"

என்று தன்னை பிரச்சனைக்குறியவளாக்கி விட்டாள் கோர்ட் போலீஸ் என்றும் போய் விட்டாள். இனியுமா வேண்டும் அவள் உறவு? (முடிந்தது)

# ஃபிஜித் தீவில் இந்தியர் பிரச்சினை

பிஜி தீவுகளில் வாழும் சுமார் 4 இலட்சம் இந்திய வம்சாவளியினர் (இவர்களில் 60,000 பேர் தமிழர்கள்) இன்று மிகப் பெரிய கேள்விக் குறியுடன் தங்களது எதிர்காலத்தை எதிர்நோக்கியுள்ளனர். இந்தியர்களின் உரிமைகள் பறிக்கப்படுகின்றன. ஜனநாயகம் பூண்டோடு அழிக்கப்படுகிறது. இனவெறி தலை தூக்கி நிற்கிறது.

பசுபிக் பெருங்கடலின் மேற்கு பகுதியில் ஃபிஜி அமைந்திருக்கிறது. மொத்த மக்கள் தொகை ஏழு இலட்சத்து நாற்பதினாயிரம் பேர்கள். பிஜி இனத்தவர்கள், மலேனிஷியான் என்று அழைக்கப்படுபவர் 48 சதவிகிதம். 50 சதவிகிதம் இந்தியர்கள். 2 சதவிகிதத்தினர் ஐரோப்பியர்கள். இந்துக்கள் 40 சதவிகிதம்.

பெரும்பாலாக பயிரிடப்படுபவை கரும்பு, தென்னை, இஞ்சி.

இந்த குட்டி நாடான பிஜியில் சுமார் 100 ஆண்டுகளுக்கு முன்பு குடியேறியவர்கள் இந்திய வம்சாவழியினர். இவர்களது தலைவரான திரு பவத்ரா திடீர் ராணுவப்புரட்சி மூலம் பதவியில் இருந்து அகற்றப்பட்டு இருப்பது, இந்திய வம்சா வழியினரின் நிலைமை ஆபத்தான எதிர்காலத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது.

ஃபிஜித் தீவின் 8 லட்சம் மக்கள் தொகையில் 51 சதவிகித பங்கினை வகிக்கும் இந்திய வம்சா வழியினர், இலங்கை, தென்னாப்பிரிக்க நாடுகளில் வாழும் இந்திய வம்சாவழியினரைப் போலவே தங்களது அன்றாட வாழ்விலும் சோகத்தை சந்திக்க தொடங்கி விட்டார்கள்.

இங்கு இப்போது ஜனநாயகப் படுகொலை நடந்திருக்கிறது.

ஃபிஜி ராணுவத்தில் 90 சதவிகிதத்தினர் அந்த நாட்டு மக்களே இடம் பெற்றுள்ளனர். இங்கு உள்ள கரும்பு தோட்டங்களில் கூலி வேலை செய்யும் இந்தி பேசும் இந்தியர்களே அதிகம்.

1970 இல் இந்த நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்தபோது உள்ளூர் இன வாசிகளுக்கு ஆதரவாகவே அரசியல் சட்ட அமைப்பு உருவானது. முதல்வராகவும் அவர்களது இனத்தைச் சேர்ந்த திரு மாரா என்பவரே தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆனால், அங்கு நிலவிய ஜனநாயக முறையை விடாப்பிடியாக பிடித்துக் கொண்டு தற்போது நடைபெற்ற தேர்தல்களில் இந்திய வம்சா வழியினர் பெரும்பான்மை பலம் பெற்று ஆட்சிப் பொறுப்பை ஏற்றனர்.

பார்லிமெண்டில் மொத்தமுள்ள 28 இடங்களில் இந்தியா வம்சா வழியினரின் தலைவரான திரு. பவத்ரா அணி 19 இடங்களைப் பெற்றது. 1987 ஏப்ரல் 13ம் தேதி இவர் பொறுப்பு ஏற்றார்.

ஆனால், மே 14ம் தேதி அன்று தலைநகர் 'சுவா'வில், பார்லிமெண்ட் கூட்டம் நடந்து கொண்டிருந்தபோது ராணுவத்தில் லெப்டினண்ட் கர்னல் ஆகப் பணியாற்றிய சித்திவேணி ரபூகா, 10 ராணுவவீரர்களுடன் நுழைந்து பிரதமர் பவத்ராவையும் மற்றும் அமைச்சர்களையும் கைது செய்தார்.

இதைத் தொடர்ந்து கடை அடைப்புகளும், இந்தியர்களுடன் உள்ளூர்வாசிகள் மோதலும் தீவிரமடைந்து வருகின்றன. இந்திய வம்சா வழியினர் பலர் உயிரிழந்துள்ளனர்.

இந்தியத் தூதுவராக ஃபிஜி தீவில் இருக்கும் திரு.டி.பி. சீனிவாசன், பிஜியின் கவர்னர் ஜெனரல் பொறுப்பிலிருக்கும் திரு. கனிலாவ் அவர்களைச் சந்தித்தபோது 'மீண்டும் தேர்தல் நடக்கும், இந்தியர்களுக்கு அரசியல் எதிர்காலம் உண்டு' என்று உறுதி கூறியிருக்கிறார்.

ஆனால் இங்குள்ள இந்தியர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாகவே உள்ளது. தற்போது ஆட்சிப் பொறுப்பிலிருக்கும் ரபூகாவின் கருத்து ''இந்தியர்களை ஆள விடமாட்டேன். அவர்கள் இரண்டாம் தர குடி மக்களாகவே இருக்க வேண்டும்'' என்பது தான். பெரும் இனவெறியராக இருக்கிறார் இவர்.

இன்று இலங்கையில் இந்தியர்படும் துயரம் மிகக் கொடூரமானது....

பிரிட்டனில் குடியுரிமைச் சட்டத்தால் முதலிடம் பெறாத நிலையில் அல்லலுறும் இந்தியர்கள்....

இனவெறி பிடித்த தென்னாபிரிக்காவில் சென்றாண்டு இந்திய வம்சா வழியினர் அனுபவித்த துயரங்கள்....

இன்று ஃபிஜியில் இந்திய இனத்தவர்கள் எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் இவைகளைவிடக் கொடூரமானவைகளாக மாறாது என்பது என்ன நிச்சயம்..?

பாரதப் பிரதமர், அணிசேரா நாடுகளின் தலைவர் என்ற முறையில் நமது மக்கள்படும் துன்பத்தை நீக்க நடவடிக்கை எடுக்காவிட்டால் முடிவு என்னவாகும்..?

தமிழர்களைப் பொறுத்தவரையில் ஃபிஜியில் மொத்தம் சுமார் 60 ஆயிரம் பேர் உள்ளனர்.

இவர்களில் பெரும்பாலோர் கரும்புத் தோட்டங்களில் பணிபுரிபவர்களே. அரசு வேலைகளில் கணிசமான தொகையினரும், வியாபாரத்தில் சிலரும் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் வாழ்க்கைத்தரத்தைப் பொறுத்தவரை முக்கால்வாசிப் பேர் வெறும் கொத்தடிமைகளாகவே வாழுகின்றனர்.

இவ்வாறு நாளைய நிலையை உலகமே விழிப்போடு பார்த்திருக்கிறது.

பொதுவாக வெளிநாடுகளில் வாழும் இந்தியர்கள் எதிர்காலம்- அவர்கள் பற்றி கொள்கைக் குறித்த தெளிவான நிலை ஏற்பட வேண்டும். சர்வதேச சட்டப்படி அவர்களுக்குரிய உரிமைகள் கிடைக்க வேண்டும்.

---

**நாட்டுப் பாடல்கள் காட்டும்**

## இலங்கை

# தோட்டப்புற வாழ்வு

**கட்டுரைத் தொடர்**

**விரைவில் வரும்**

## கல்வி கற்க விரும்புகிறவர்களுக்கு

# ஆலோசனைகள் - தகவல்கள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சென்னை - 20 ல் இருக்கும் இன்ஸ்டிட்யூட் ஆப் கெமிக்கல்ஸ் எஞ்சினியரிங்-யில் சேர்ந்து கெமிக்கல் டெக்னோலஜியில் டிப்ளமா கோர்ஸ் எடுக்கலாம்.

சென்னை, சிவகாசியிலுள்ள இன்ஸ்டிட்யூட் ஆப் பிரிண்டிங் டெக்னாலஜியில் சேர்ந்து அச்சுக் கலை பயிலலாம்.

சென்னை, இன்ஸ்டிடியூட் ஆப் லெதர் டெக்னாலஜியில் சேர்ந்து தோல் பொருள் சம்பந்தமாக படித்து டிப்ளமா பெறலாம்.

இன்ஸ்டிட்யூட் ஆப் கேட்டரிங் டெக்னாலஜியில் (டெல்லி, பம்பாய், கல்கத்தா) சேர்ந்து பேக்கரி, இனிப்பு பண்டங்கள் தயாரித்தல், ரெஸ்ட்டூரண்ட்களில் கவுண்டர் சேவையாற்றுதல், சமையல் கலை, ஹோம் சயன்ஸ் (பெண்களுக்கு மட்டும்) ஆகியவற்றில் பயிற்சி டிப்ளமா பெறலாம்.

பிலிம் இன்ஸ்டிட்யூட் (சென்னை) சேர்ந்து நடிப்பு, டைரக்ஷன், எடிட்டிங், கேமரா சம்பந்தமாக படித்து டிப்ளமோ, சர்ட்டிபிகேட் கோர்ஸ் ஆகியவை பெறலாம்.

ஓவியக் கல்லூரி (சென்னை, கும்பகோணம்) யில் சேர்ந்து வர்ணம் பூசுதல், சிற்பவேலை கமர்ஷியல் ஆர்ட், நுண்கலை ஆகியவை பயின்று பட்டயம், சான்றிதழ் பெறலாம்.

மரவேலை, உலோகவேலை மெஷின்களில், துணிகளில் டிசைன்கள் உருவாக்குதல் போன்ற தொழில்களிலும் பயிற்சிகள் தரப்படுகிறது. டெக்ஸ்டைல் டெக்னாலஜி, டெக்ஸ்டைல் பிராஸஸிங், டிசைனிங் அண்டு வீவிங். டெக்ஸ்டைல் மார்கெட்டிங், மேனேஜ்மண்ட் முதலியன பல தொழில்கள் உண்டு.

இவற்றில் பெண்கள் பயிற்சி பெறவும் சில தொழில்கள் உண்டு.

தொகுத்து தருபவர்

**ப. செல்வராசன்**

இவற்றில் டிப்ளமா கோர்ஸு களுக்கு படிப்புக் காலம் 3 வருடங்கள், சான்றிதழ் படிப்பு 6 மாதங்கள்,

தகுதிகள்:- பொறியியல் பட்டய வகுப்புகளில் சேர பள்ளியிறுதித் தேர்வில் அறிவியல், கணிதத்தில் தலா 40% மும், இரண்டிலும் மொத்தமாக 100% மும் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

பிறவற்றுக்கு ஆங்கிலம், அறிவியல் ஒவ்வொன்றிலும் 40% மும் மொத்தமாக 100% மும் மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

பெண்களுக்கான காஸ்டியூம் டிசைன்னிங், பிரஸ் மேக்கிங் மற்றும் கிராப்ட் கோர்ஸ் இன் பேக்கிரி அண்ட் கன்பக்சனரிக்கு எஸ். எஸ். எல். சி. தேர்ச்சி பெற்றிருந்தால் போதுமானது

Electrical Supervisors con-petency Certificate கோர்ஸுக்கு எஸ். எஸ். எல். சி. தேறியவர்களும், தவறியவர்களும் தேர்ந்தெடுக்கப்படுவர், (சென்னை மத்திய பாலிடெக்னிக்கில் மட்டும் கற்பிக்கப்படும் Head gardeners சான்றிதழ் படிப்புக்கு எட்டாம் வகுப்பு அல்லது புதிய 10 பிளஸ் 2 முறைப்படியான கல்வியில் 7ம் வகுப்பு வரை படித்திருக்க வேண்டும், வயது 25க்குள் இருக்க வேண்டும்.)

தற்போது மேற்படி பல படிப்புகளுக்கு சேர்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. அட்மிசனும் நடைபெறுகிறது. இதற்கான விபரங்களை ஜூன் மாத பத்திரிகைகளில் அறிபலாம்.

சேர விழைவோர் சம்பந்தப்பட்ட பாலிடெக்னிக்குகளில்-இன்ஸ்டிட்யூட்களில்விண்ணப்பப் படிவங்கள், விளக்கங்கள் பெறலாம்.

பொறியியல் பட்டய வகுப்புகளில் மதுரை, நாகர் கோயில், தூத்துக்குடி ஆகிய பாலிடெக்னிக்குகளில் ஒவ்வொரு இடமும், திருச்சி பாலிடெக்னிக்கில் இரு இடங்களும் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது,

சென்னை, மதுரை, வேலூர், கோயம்புத்தூர், நாகர் கோயில் ஆகிய பாலிடெக்னிக்குகளில் பொறியில் பட்டய வகுப்பில் ஒவ்வொரு இடமும், திருச்சி பாலிடெக்னிக்கில் இரு இடங்களும் பர்மா அகதிகளுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது.

இப்பாலிடெக்னிக்குகளில் தங்கி படிக்கும் வசதியுண்டு, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள்—கடனுதவியும் கூட—அரசு விதிமுறைகளுக்கிணங்க அளிக்கப் படுகிறது.

# பாலிடெக்னிக்குகளில் சேரலாம்

அரசு பாலிடெக்னிக்குகளிலும், ஸ்பெஷல் இன்ஸ்டிட்யூஷன்களிலும் சேர்வதற்கான விண்ணப்பங்கள் இப்போது கோரப்பட்டுள்ளன.

மேற்படி நிறுவனங்களில் (ஆண் மற்றும் மகளிருக்கான) அளிக்கப்படும் மூன்றாண்டு பட்டய (டிப்ளமா) படிப்புகளில் முதலாண்டு வகுப்பில் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

நிர்ணயிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அந்தந்த கல்வி நிறுவனத்தில் முதல்வர் என்ற பெயருக்குப் பெறப்பட்ட ருபா 15/-அல்லது SC/ST விண்ணப்பத்தாரர் விஷயத்தில் ரு.5/-க்கான வங்கி டிராப்ட் உடன் சுயமுகவரி எழுதிய 30x12.5 செ.மீ. அளவு உறையை இணைத்து எழுத்து மூலம் சமர்ப்பிப்பதன் மூலம் நேரிலோ அல்லது அஞ்சல் மூலமோ பெறலாம்.

விண்ணப்பப்படிவம் பெற கடைசி தேதி : 10-7-1957

விண்ணப்பம் சென்று சேர" : 11-7-1987

முழு விபரங்களை ஜூன் மாத தினசரிகளில் பார்க்கலாம்.

# தபால் மூலம் பட்டப் படிப்பு

சென்னைப் பல்கலைக் கழகத்தின் அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம் அஞ்சல் மூலம் பட்டப்படிப்பு, பட்ட மேற் படிப்பு, சான்றிதழ் படிப்பு பட்டயப் படிப்பில் சேர விரும்புவோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரியுள்ளது.

திறந்த வெளிக் கல்வித் திட்டத்தின்மூலம் பட்டப்படிப்பு பெறலாம்- இதற்கு கல்வித்தகுதி எதுவும் தேவையில்லை; ஜூன் முதல் நாளன்று 21 வயது பூர்த்தியாகி இருக்கவேண்டும்.

பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்: 13-7-87

மற்றைய படிப்புகளுக்கு விண்ணப்பிக்க
கடைசி நாள்: 13-8-1987

விண்ணப்பத்தையும், சுயமுகவரி எழுதப்பட்டு, அஞ்சல் தலை ஒட்டப்படாத 11X26 செ. மீ அளவுள்ள மேலுறையுடன், கீழ்க்கண்ட முகவரிக்கு ரூபா பத்துக்கான வரைவோலை (Demand Draft) அல்லது இந்திய அஞ்சல் ஆணை (Postal Order) அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

இயக்குனர்
அஞ்சல் வழிக் கல்வி நிறுவனம்
சென்னை பல்கலைக் கழகம்
சென்னை - 600 005

மேல் விவரங்களை ஜூன் மாத தினசரிகளில் பார்க்கலாம்.

## பல படிப்பு - பயிற்சிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகிறது

1987-88 கல்வி ஆண்டில் சேர்ந்து பயில்வதற்கான பல் வேறுபட்ட படிப்புக்கான விண்ணப்பங்கள் தற்போது கோரப்பட்டுள்ளன.

பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, சான்றிதழ் படிப்பு மற்றும் தொழில் ரீதியான பொறியியல், பொறியியலல்லாத பல் வேறு பட்டபடிப்புகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது.

ஜூன் — ஜூலை மாத நாளேடுகளில் இவை சம்பந்தப்பட்ட பல விளம்பரங்களைக் காணலாம்,

நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்? உங்கள் படிப்புக்கு தகுந்தபடி மேலும் ஏதேனும் பொருத்தமான படிப்பில்—பயிற்சியில் சேரலாம்.

Editor & Publisher: T. S. RAJU, 1, South Gangai Amman koil 2nd Street, Madras-600094. Printer: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street. Madras-600024.

# தொழிற்சங்கம் அமைப்பதன் அவசியம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

சங்க நடவடிக்கைகளின் வெற்றிக்கு மக்களின் ஆதரவு இன்றியமையாதது ஆகும். பொது மக்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு உண்மை நிலையைத்தெளிவு படுத்துதல் வேண்டும் தொழிலாளர் நலச் சட்டங்களை இயற்றுமாறு அரசை வற்புறுத்த பொது மக்களின் தொடர்பு அவசியமாகிறது. சட்டதிட்டங்களை சிறப்பாகச் செயல்படுத்தவும் சமுதாய நலன்களை பாதிக்கும் பிரச்னைகளில் அரசின் கவனத்தை கவரவும் தொழிற்சங்கம் மக்கள் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

உறுப்பினர்களுக்குத்தொழிற் சங்க கல்வி வகுப்புகள் நடத்தலாம், தொழிலாளர் கல்வியும், அவர்களின் குழந்தைகளுக்கான கல்வி வகுப்பும், பொதுக் கல்வி, தொழில்நுட்பக் கல்வி போன்ற பயிற்சி வகுப்புக்கள் நடத்துவதும் தொழிற்சங்கங்களின் இதர பணிகளாகும். தொழில்கள் இயந்திர மயமாக்கப் படும் பொழுது ஏற்படும் சிக்கலைச் சீரமைப்புகளால், ஆட்குறைப்பு செய்யப்படும் தொழிலாளர்களுக்கு மாற்றுப் பயிற்சி யளிக்க சங்கம் ஏற்பாடு செய்யலாம் தொழிற்சங்கம் பொறுப்புள்ள உறுப்பினர்களைத் தயாரிக்கவும் நல்ல தலைவர்களை தொழிலாளர் மத்தியிலிருந்தே உருவாக்கவும் இந்த தொழிலாளர் கல்விப் பயிற்சி அவசியமாகும்

தமது கோரிக்கையை வலியுறுத்தவும் ஒற்றுமையை உணர்த்தவும் ஊர்வலம், ஆர்ப்பாட்டம் முதலியவற்றிற்குச் சங்கம் ஏற்பாடு செய்கிறது. சில நேரங்களில் வேலை நிறுத்தங்களும் அவசியமாகிறது: இவற்றிற்கெல்லாம் திட்டமிடுவதும் சங்கத்தின் முக்கியமான பணிகளிலொன்றாகும். பொது நடவடிக்கைகளுக்கு விளம்பரங்கள் செய்வது தொண்டர்களுக்குப் பயிற்சி அளிப்பது. உறுப்பினர்களைத் தயார் செய்வது சமுதாய நலன்களில்—அபாய காலங்களில் பொதுமக்களுக்குச் சேவை செய்தலும் தொழிற் சங்கங்களின் இதர பணிகளாகும், (சர்வதேச தோட்ட விவசாய மற்றும் சம்பந்தப்பட்ட தொழிலாளர் சம்மேளனத்தின் வெளியீட்டிலிருந்து)

## இந்திய அதிகாரிகள் மீது இலங்கை இராணுவம் சுட்டது

யாழ்மக்களுக்கு உணவுப் பண்டங்கள் கொடுத்து உதவச் சென்ற இந்திய அதிகாரிகள் மீது இலங்கை இராணுவம் சுட்டதாக விடுதலைப்புலிகள் தகவல் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசின் பொருளாதாரத் தடையிலும் இராணுவத்தின் தாக்குதல்களாலும் பலியாகி பசியும் பட்டினியும் கிடக்கும் யாழ் மக்களுக்கு உணவுப் பொருட்கள் மருந்துகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இந்த நிவாரணப் பணியில் ஈடுபட்டிருக்கும் இந்திய செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் இராணுவத் தாக்குதல்களால் யாழ்ப்பாணத்தில் சேதமடைந்த கடைகளையும் கட்டிடங்களை பார்வையிட்ட போது இராணுவம் சுட்டிருக்கிறது. இவர்களுடன் நிவாரணப் பணியில் ஈடுபட்டுள்ள இலங்கை செஞ்சிலுவை சங்க அதிகாரிகள் இது ஏற்படுத்தியுள்ளது. O

Regd. No R. N. 45556/83    Regd. No' TN/MS (C)702

MAKKAL MARUVAZHVOO

மக்கள் மறுவாழ்வு

முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை - 600 094.

# இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியா உதவி

பசிபட்டினியில் வாடும் யாழ்ப்பாணத்து மக்களுக்கு உதவுவதற்காக அரிசி, பருப்பு, புளி, சர்க்கரை, பால்பவுடர் மருந்து பொருட்கள் என்று இன்றியமையாத பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்ற கப்பல் 'ஐலண்ட் பிரைட்' காங்கேசன் துறைமுகத்தில் 24ந் தேதி சென்று இறக்கியது.

தொடர்ந்து ஸ்ரீவத்ஸா என்ற கப்பலும் இந்த பணியைத் தொடர்ந்தது.

உயிர் காக்கும் மருந்து, தீப்பெட்டி, மண்ணெண்ணை முதலான பொருட்களெல்லாம் அனுப்பப்பட்டு வருகிறது.

இந்த கப்பல்களில் ஏற்றிச் செல்லப்படும் பொருட்களை அந்த நாட்டு அரசு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படும். இந்த பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய, இலங்கை அரசு பிரதிநிதிகள் முன்னிலையில் இலங்கை செஞ்சிலுவை சங்கத்தினரால் விநியோகிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படுவது குறித்து அமெரிக்க அதிபர் ரீகன் நிர்வாகம் வரவேற்றுள்ளதோடு, இந்த நடவடிக்கைக்கு ஆதரவும் தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் விநியோகத்தை விநியோகிக்க உதவும் வகையில் விடுதலைப்புலிகள் இயக்கம் முழு அளவில் சண்டை நிறுத்தம் மேற்கொள்ள முடிவு செய்துள்ளது. போரை தற்காலிகமாக நிறுத்த வேண்டும் என்று இலங்கை அரசையும் கேட்டுக் கொண்டது.

ஆனால் ஒரு இராணுவ அதிகாரி, 'நாங்கள் போர் செய்யவில்லை, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனநாயக அரசுக்கு எதிராக செயல்படுகிறவர்கள் மீதுதான் நடவடிக்கை எடுத்து வருகிறோம். எனவே போர் நிறுத்தம் என்ற பேச்சுக்கே இடம் இல்லை' என்று கருத்து தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் மற்றொரு பெரும் தாக்குதலுக்கு இலங்கை அரசு தயாராகி வருகிறது. தமிழ் மாகாணத்திற்குள் ஆயுதங்கள் ஏற்றி வருவதும், இராணுவ வீரர்கள் வந்து குவிவதும் வேகமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், தமிழீழ விடுதலை புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனுடன் நேரில் சமரசப்பேச்சு நடத்த ஏற்பாடு செய்யுங்கள் என்று தம்மைச் சந்தித்த இந்து குடிமக்கள் குழுவிடம் ஜயவர்த்தனா கேட்டுக் கொண்டுள்ளதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

அதே வேளையில், காலியாக இருக்கும் நாடாளுமன்ற தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடத்த ஜயவர்த்தனா அறிவித்துள்ளார்.

பிரிவினையை எதிர்த்து அனைவரும் பிரமாணம் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற இலங்கை அரசின் வேண்டுகோளை நிராகரித்ததைத் தொடர்ந்து தமிழ பிரதேசத்திலுள்ள 16 தொகுதிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி இழந்தார்கள், இந்த தொகுதிகளுக்கே தேர்தல் நடத்த ஜயவர்த்தனா அறிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளிலிருந்து அவர்கள் முற்றிலும் அகற்றப்பட்ட பின்னர், அங்கு இடைத்தேர்தல் நடத்த இலங்கை அரசு திட்டமிட்டிருப்பது 'ஒரு பெரிய மோசடியாகும்' என்று தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இலங்கையில் நடைபெறவிருக்கும் உள்ளாட்சித் தேர்தல்களை பகிஷ்கரிக்க சிரிலங்கா சுதந்திரக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, சிறிலங்கா மகாஜனக் கட்சி, நவ சமசமாஜக் கட்சி, மகாஜன எக்சத் பெரமுன, ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் ஆகியவை முடிவு செய்துள்ளன.

இலங்கையில் நூற்றுக்கணக்கில் தமிழர்கள் கொடுமைப்படுத்தப்படுவது, கடந்த இரண்டரை ஆண்டுகளில் இலங்கை பந்தோபஸ்து படையினரால் கைது செய்யப்பட்ட சுமார் 500 பேர் காணாமல் போனதாக கூறப்படுவது ஆகியவை பற்றி உடனடியாக பாரபட்சமற்ற, சுயேச்சையான விசாரணை ஒன்றை நடத்துமாறு இலங்கை அரசை 'அம்னஸ்டி' என்ற சர்வதேச மனித உரிமைகளுக்கான அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

ஆனால் இந்த குற்றச்சாட்டை இலங்கை அரசு மறுத்துள்ளது.

**இதற்கிடையில் வடபகுதியில் இலங்கை ராணுவம் குண்டு வீசி தாக்குவதும் விடுதலை புலிகள் எதிர்தாக்குதல் நடத்துவதும் தொடர்ந்து நடக்கிறது. ராணுவத்தின் கொடுமைகளுக்கு அஞ்சி தப்பித்து தமிழ் மக்கள் அகதிகளாக இந்தியாவுக்கு வருவதும் தொடர்கிறது.** O

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

வாரத்திலிருந்து இன்று வரை வந்துசேர்ந்துள்ள அகதிகளின் எண்ணிக்கை 2000 க்கும் மேலே.

மேலும் ஜூன் 16, புதுக்கோட்டை அருகே கரையேறிய அகதிகள் 100 பேரில் 29 குழந்தைகளும் அடங்குவர், தொடர்ந்து இதே நாளில் 7 படகுகளில் 852 பேரும், ஜூன் 17 அன்று 6 படகுகளில் 235 பேரும் வந்து இறங்கினார்கள், இத்துடன் ஜூன் 19ம் தேதியே சுமார் 1000 பேர் வந்திருப்பதாக வேறொரு செய்தியும் கூறுகிறது.

பின்னர் ஜூன் 25ந் தேதி தஞ்சை மாவட்டம் மல்லிப்பட்டணம் கடற்கரையில் 29 ஆண்களும், 6 பெண்களும் அகதிகளாக வந்து இறங்கியுள்ளனர்.

மே மாத இறுதியில் வர ஆரம்பித்த அகதிகளின் எண்ணிக்கை இன்று வரை சுமார் 8000 தாண்டிவிட்டதாக செய்திகள் கூறுகின்றன. மே மாத இறுதி வரை வந்து சேர்ந்திருந்த அகதிகளின் எண்ணிக்கை சுமார் 1,25,000 பேருக்கு மேல் வந்திருக்கிறார்கள் என்பது அறிந்ததே. O